IN THE COURT OF I ADDITIONAL SPECIAL COURT FOR NDPS ACT CASES, MADURAI.

Date : 23.06.2026

CC.No. 170/2024

PW1 – Tr. காதர்மைதீன்

1, 2, 4, 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –

என்னை இந்த வழக்கில் செல்போனில் சோதனைக்கு கூப்பிட்டது போன்று அதற்கு முன்பு எப்போதாவது அழைத்து உள்ளார்களா என்றால் அழைத்துள்ளனர். இதற்கு முன்பு போதைப் பொருள் வழக்கு சம்பந்தமாக என்னை சாட்சியாக இருக்க அழைத்துள்ளார்களா என்றால் இல்லை. எனக்கு என்டிபிஎஸ் சட்டத்தைப் பற்றி தெரியுமா என்றால் தெரியும். எனது வீட்டிற்கும் சம்பவ இடத்திற்கும் இடையே சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரம் இருக்கும். எனது உடனடி மேல் அதிகாரி தாசில்தார் ஆவார். அவருக்கு எழுத்துப்பூர்வமாக தகவல் சொன்னேனா என்றால் போனில் தகவல் சொன்னேன். என்னை அழைத்த அதிகாரி அழைப்பானை எதுவும் தந்தாரா இருந்தால் இல்லை. என்னை ஆய்வாளர் 29.12.2023 அன்று பகல் 11 மணிக்கு விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். அந்த விசாரணையில் சார்பு ஆய்வாளர் என்னை செல்போனில் அழைத்ததாக சொன்னேனா என்றால் சொன்னேன். நான் சம்பவ இடத்திற்கு செல்லும் முன்பாகவே போலீசார் சோதனை நடவடிக்கை மேற்கொண்டு இருந்தனர் என்றால் சரிதான். மொத்தமாக எவ்வளவு வண்டிகள் சோதனை செய்தனர் என்பது தெரியவில்லை. ஐந்து பேருக்கும் தனித்தனியாக சோதனை சம்மத கடிதம் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. ஒரே ஒரு சோதனை சம்மத கடிதம் கொடுக்கப்பட்டது. அந்த சோதனை சம்மத கடிதத்தில் என்னை அழைத்த

சார்பு ஆய்வாளர் கையொப்பம் செய்துள்ளார் என்றால் இல்லை. சோதனை செய்வதற்கு முன்பு ஒவ்வொரு எதிரிக்கும் தனித்தனியாக அவர்களின் உரிமை பற்றி விளக்கப்பட்டதா என்றால் விளக்கப்பட்டது. சோதனை சம்மத கடிதத்தில் ஒரு பகுதி கணினியில் டைப் செய்யபட்டும் படித்து பார்த்தோம் சோதனை செய்ய சம்மதிக்கிறோம் என்பது மட்டும் கைகளால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அத்தாட்சி ஒரே அத்தாட்சி தான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். அத்தாட்சியை யார் எழுதியது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கணினியில் டைப் செய்து கொண்டு வந்தனர். நான் அரசாங்கத்தில் வேலை பார்ப்பதால் அரசு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போன்று சொன்ன விதத்தில் சொன்ன நேரத்தில் எந்த வாகன தணிக்கையும் நடத்தப்படவில்லை என்றாலும் எந்தவிதமான போதைப் பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கின் சான்று பொருட்கள் எதுவும் நான் சொன்னது போன்று கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. நான் போலீசாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அத்தாட்சியில் எந்த எதிரியிடமும் கையொப்பம் பெறவில்லை என்றால் சரிதான். அதனால் நான் சொன்னது போன்று எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானும் வருவாய் ஆய்வாளரும் அலுவலகத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தோம் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் சிசிடிவி கேமரா இருந்ததா என்றால் சரியாக தெரியவில்லை.

**3ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

சார்பு ஆய்வாளர் என்னை அழைத்ததாக சொல்லும் செல்போன் எண்னை ஆய்வாளர் விசாரிக்கும் போது எனது வாக்குமூலத்தில் சொன்னேனா என்றால் இல்லை. சார்பு ஆய்வாளர் என்னை எந்த எண்ணில் இருந்து தொடர்பு கொண்டார் என்பதையும் வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். உண்மையிலேயே சார்பு ஆய்வாளர் என்னை அழைத்து இருந்தால் இந்த விவரங்களை சொல்லி இருப்பேன் என்றால் சரியல்ல. சோதனைக்கு சென்றதாக சொல்வதற்கு முன்பும் சோதனை முடிந்து திரும்பிதாக சொல்வதற்கு பின்னரும் எனது மேலதிகாரிகளுக்கு whatsapp மூலம் குறுஞ்செய்தி எதுவும் அனுப்பி தகவல் தெரிவித்தேன் என்றால் இல்லை. போன் மூலம் தகவல் சொன்னேன். எங்கள் அலுவலகத்தில் மூவ்மெண்ட் ரிஜிஸ்டர் பராமரிக்கப்படுகிறது என்றால் சரிதான். நான் சோதனைக்கு சென்றது சம்பந்தமாகவோ முடித்துவிட்டு வந்தது சம்பந்தமாகவோ வழக்கு நடவடிக்கையில் பங்கேற்றது தொடர்பாகவோ மூவ்மெண்ட் ரிஜிஸ்டரில் பதிவு செய்தேனா என்றால் இல்லை. ரோந்திற்கு சென்றதாக சொல்வது சம்பந்தமாக எனது டூர் டைரியிலோ தினசரி டைரியிலோ பதிவுகள் இல்லை என்றால் சரி இல்லை. ரோந்திற்கு சென்று திரும்பிய அது பின்பு நான் எனது மேலதிகாரிக்கு எழுத்துப்பூர்வமாக அறிக்கை எதுவும் அனுப்பினேனா என்றால் இல்லை. போன் மூலம் உயரதிகளுக்கு தகவல் தெரிவித்து ரோந்துக்கு சென்றிருந்தால் நான் அது சம்பந்தமாக உயரதிகாரிகளுக்கு அறிக்கை அனுப்பி இருப்பேன் என்றால் சரியல்ல. அ.சா.ஆ.1, அ.சா.ஆ.2 ஆகிய இரண்டு ஆவணங்களிலும் நான் எனது அலுவலகத்தில் வைத்து போலீசார் தயார் செய்ததில் கையொப்பம் செய்து முத்திரை வைத்தேன்

என்றால் சரியல்ல. தமிழ்நாடு டிஸ்ட்ரிக்ட் மேனுவல் எனக்கு பொருந்தும் என்றால் சரிதான். அதில் பாரா 101 இல் ஒவ்வொரு அலுவலகத்தின் அலுவலக முத்திரையும் ரப்பர் ஸ்டாம்பும் எழுத்துப்பூர்வமான உத்தரவு இல்லாமல் வெளியே குறிப்பிட்ட பணிகள் அல்லாது வேறு எந்த பணிக்கும் கொண்டு செல்லக்கூடாது என்றாலும் சரிதான். இந்த விவரம் வருவாய் நிலை ஆணைகளில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான் வருவாய் நிலை அணை 7(4) ல் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அலுவலக நேரம் முடிந்தவுடன் முத்திரைகளை பூட்டி பாதுகாப்பாக வைக்க வேண்டும் என்று நிலையாணைகளில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் வெளியே அலுவலக பணிக்காக செல்லும் போது அவசர காலங்களில் தயார் செய்யப்படும் ஆவணங்களில் எனது கையொப்பம் மட்டும் போட்டு அதற்கு கீழ் எனது பதவியின் பெயரை எழுத வேண்டும் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்வதாக சொல்லும் அ.சா.ஆ.1, அ.சா.ஆ.2 ஆவணங்களின் நகல்களை டுர் ரிஜிஸ்டர் டுடியூட்டி ரிஜிஸ்டரில் வைத்து கொண்டேனா என்றால் இல்லை. Commissioner of Revenue proceedings என்ன சொல்லப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியும். அதிகாலையில் எனது பதவி முத்திரையை எடுத்துச் செல்ல மேலதிகாரிகளிடம் எழுத்துப்பூர்வமான அனுமதி பெற்றேன் என்றால் இல்லை. காவல்துறை சம்பந்தப்பட்ட ஆவணங்களில் எனது பதவி முத்திரையை வைத்து கையொப்பம் செய்வது நிலை ஆணைகளுக்கு எதிரானது என்றால் சரியல்ல. போலீசார் தயார் செய்த ஆவணங்களில் நான் எனது அலுவலகத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. ஸ்டாக் ரிஜிஸ்டர் ஆப் சீல்ஸ் பராமரிக்கப்படுகிறது என்றால் சரிதான். வழக்கு சம்பவ இடத்தில் நான் 30 நிமிடங்கள் இருந்தேன். அந்த இடத்தின்

நான்கு இடங்களை என்னால் கூற முடியுமா என்றால் முடியும். வடக்கில் அய்யாபுரம் ஊர் உள்ளது, கிழக்கில் குத்துக்கல்வலசை ரவுண்டானா உள்ளது, மேற்கில் இலஞ்சி ரோடு உள்ளது, தெற்கில் காலியிடம் உள்ளது. நான்கு எல்லைகள் பற்றிய கேள்விக்கு என்னுடைய பதில் பொருத்தமானது அல்ல என்றால் சரியல்ல. சோதனை சம்மத கடிதத்தில் நான் முதல் விசாரணையில் சொன்ன வாகனத்தின் பதிவு எண் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் மண்டல துணை வட்டாட்சியர் நிலையில் Non Gazatted அதிகாரி என்றால் சரிதான். அ.சா.ஆ.2 அத்தாட்சி பக்கம் மூன்றில் அரசிதழில் பதிவு செய்யப்பட்ட தென்காசி மண்டல துணை வட்டாட்சியர் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனைத் தொடர்ந்து வருவாய் ஆய்வாளர் திரு.முகேஷ் என்றும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வருவாய் ஆய்வாளர் கெசட்டட் அதிகாரி கிடையாது என்றால் சரிதான். எந்தெந்த நடவடிக்கைகள் யாரால் செய்யப்பட்டது என்பதை என்னால் சரியாக சொல்ல முடியுமா என்றால் முடியும். நான் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும் வழக்கு நடவடிக்கைகளில் பங்கு பெறவில்லை என்றாலும் சரியல்ல. நான் எனது அலுவலகத்தில் வைத்து கையொப்பம் செய்து ஆவணங்களுக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**6 முதல் 11 எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை** – இல்லை.

Sd/–Tr.G.Sudhagar, B.Sc.,M.L.,
Judge,
I Additional Special Court for NDPS Act Cases,
Madurai